# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில்அருகில்), எல்டாம்ஸ்ரோடுசந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை 600 018. தொலைபேசி எண்: 24347590**

**<u>ஆணை நாள் – 03.02.2015</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,
## மாநில தகவல் ஆணையர்

**<u>வழக்கு எண். 59170/F/2013</u>**

| | | |
|---|---|---|
| திரு. கே.ஆறுமுகன்,<br>3/6, கட்டபொம்மன் வீதி,<br>கள்ளபாளையம்,<br>செட்டிபாளையம் (வழி),<br>கோயம்புத்தூர்–641 201. | .. | மேல்முறையீட்டாளர் |
| பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர்,<br>(இயக்கமும், பராமரிப்பும்),<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்<br>கழகம், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், திருப்பூர்,<br>திருப்பூர் மாவட்டம். | .. | பொது அதிகார அமைப்பு |

*****

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று (03.02.2015) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு. கே.ஆறுமுகன் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012, விதி–7.ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு.ஜி.சிவசாமி, செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், திருப்பூர் மாவட்டம் ஆஜரானார்.

3. மேல்முறையீட்டாளர், 19.12.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (03.02.2015) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மேல்முறையீட்டாளர் 04.09.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம்,

2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 13.09.2013 அன்று சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

4. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில், காரைப்புதூர் பிரிவில் உள்ள முருகம்பாளையம் மின்பகிர்மானப் பிரிவில் உள்ள மின் பயனீட்டுக் கட்டணத்திற்கான அட்டவணை விவரங்களை செப்டம்பர் 2002, நவம்பர் 2002, ஜனவரி 2003 மற்றும் மார்ச் 2003 ஆகிய மாதங்களுக்கும், மின் துண்டிப்பு செய்யப்பட்டதற்கும், மறு இணைப்பு கொடுக்கப்பட்டதற்கான பதிவேடுகளின் விவரங்களை செப்டம்பர் 2002, நவம்பர் 2002, ஜனவரி 2003 மற்றும் மார்ச் 2003 ஆகிய மாதங்களுக்கும் கேட்டிருக்கிறார். பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் தனது 10.09.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக மேற்கூறிய தகவல் அடங்கிய ஆவணங்கள் பத்து வருடங்களுக்கு மேற்பட்டதாக இருப்பதால், அவை தற்போது காரைப்புதூர் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்திருக்கிறார்.

5. மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் தனது 25.10.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக இனம்–1ற்கு தகவலாக காரைப்புதூர் பிரிவு அலுவலகம் 1993 முதல் இயங்கி வருவதாகவும், கடந்த 16.05.2008 முதல் இரு பிரிவு அலுவலகங்களாக சம்பந்தப்பட்ட கோப்புகளுடன் பிரிக்கப்பட்டு காரைப்புதூர் பிரிவு மற்றும் முருகம்பாளையம் பிரிவு என இரு அலுவலகங்களாக செயல்பட்டு வருவதாகவும், மனுதாரர் தகவல் கோரும் ஆவணங்கள் பத்து வருடங்களுக்கு முந்தையது எனவும், போதிய கால அவகாசமின்மையும் மற்றும் ஆட்கள் குறைவு காரணமாகவும் தேடியும் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்து, இனம்–2ற்கு மின் துண்டிப்பு மற்றும் மறு இணைப்புப் பதிவேட்டில் பதிவாகியுள்ள மின் இணைப்புப் பட்டியலின் நகலை மனுதாரருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

6. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகாத சூழ்நிலையில், பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது. விசாரணையில், பொதுத் தகவல் அலுவலர் இனம் ஒன்றிற்கான தகவல்கள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கிறார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கது அல்ல எனவும் இந்த ஆணையம் கருதுகிறது. இந்நிலையில் இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:-

1. **பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் இன்றைய விசாரணையின் போது, காரைப்புதூர் பிரிவில் உள்ள முருகம்பாளையம் மின்பகிர்மானப் பிரிவில் உள்ள மின் பயனீட்டுக் கட்டணத்திற்கான அட்டவணை விவரங்களை செப்டம்பர் 2002, நவம்பர் 2002, ஜனவரி 2003 மற்றும் மார்ச் 2003 ஆகிய மாதங்களுக்கான ஆவணங்கள் தேடியும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கும் காரணத்தால், தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு–18(3)(b)யின்படி, மேற்பார்வைப் பொறியாளர், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், திருப்பூர் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு நேரில் சென்று, உரிய ஆவணங்களை ஆய்வு செய்து, சிரத்தையுடன் ஆவணங்களை தேடிக் கண்டுபிடித்து, மனுதாரருக்கு இனம்–1க்கான தகவல்களை இந்த ஆணை கிடைக்கப் பெற்ற பதினைந்து தினங்களுக்குள் மனுதாரருக்கு இலவசமாக ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் மூலமாக அனுப்பி, அனுப்பியதற்கான அத்தாட்சி, அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த விவர அறிக்கையை இந்த ஆணையத்திற்கு முப்பது தினங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.**

2. **மேற்குறித்த ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லையெனில், அது அழிக்கப்பட்டதா? அல்லது காணாமல் போனதா? அவ்வாறு காணாமல் போகச் செய்திருந்தால், எவ்வாறு காணாமல் போனது? அதற்குக் காரணமானவர்கள் யார்? யார்? என்பதைக் கண்டறிந்து**

**அது குறித்த ஓர் அறிக்கையையும், அதற்கு எந்தெந்த அதிகாரிகள் பொறுப்பாவார்கள், அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை பற்றிய விவர அறிக்கையையும், உரிய முறையில் ஓர் பிரமான வாக்குமூலமாகத் (sworn affidavit) தயார் செய்து, இவ்வாணையத்திற்கு முப்பது தினங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு மேற்பார்வைப் பொறியாளர், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், திருப்பூர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.**

**3. மனுதாரருக்கு அவர் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவிற்கு சுமார் ஒரு வருடம் ஐந்து மாத காலமாக அவர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை வழங்க மறுத்தமைக்காகவும், அப்போது பொறுப்பில் இருந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் என்பதைக் கண்டறிந்து, அவர்கள் தற்போது எங்கு பணியில் இருப்பினும், அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, சட்டப் பிரிவு 20(1)ன் கீழ் ஏன் அதிகபட்ச அபராதமாக ரூ.25,000/– விதிக்கக்கூடாது என்பதற்கும், சட்டப் பிரிவு 20(2)ன் கீழ் ஏன் அவர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கும், அவர்களது எழுத்துமூலமான விளக்கங்களைப் பெற்றும், தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் (இயக்கமும், பராமரிப்பும்), திருப்பூர் மின்பகிர்மான வட்டம், திருப்பூர் அவர்கள் தனது விளக்கத்தையும் சேர்த்து, இவ்வாணையத்திற்கு, முப்பது தினங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.**

10. புதிதாக வனையப்பட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு) விதிகள், 2012, விதி 7–ன்படி, மனுதாரர் இவ்வாணையத்தின் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயத் தேவை. அழைப்பாணை அனுப்பியும் மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. தான் விசாரணைக்கு ஆஜராகாததற்கான காரணங்களை விளக்கி விசாரணை தேதிக்கு முன்பாக இவ்வாணையத்திற்குக் கடிதமும் அனுப்பவில்லை. ஆனால் பொது அதிகார அமைப்பினர் அனைத்து ஆவணங்களுடன் தங்களது அன்றாட அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு, இன்றைய விசாரணையில் கலந்து கொண்டு, தங்கள் தரப்பு வாதத்தை முன்வைத்துள்ளனர். ஆனால் மேல்முறையீட்டாளர் தனது தரப்பு வாதங்களை எடுத்துரைக்க இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும், அவருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் போதுமானவையா, சரியானவையா – என்னென்ன தகவல்கள் திருப்திகரமாக இல்லை – என்னென்ன இனங்களுக்கு அரைகுறையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பன போன்ற அம்சங்களை ஆராய்வதற்கு ஏதுவாக இருக்கும் வகையில், இன்றைய விசாரணைக்கு அவர் கண்டிப்பாக வந்திருக்க வேண்டும். அவர் வராததால், அது இயலாமல் போய்விட்டது. இனி வருங்காலங்களில், ஆணையத்திலிருந்து விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்படும்போது, விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்று மேல்முறையீட்டாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

**ஒம்/– (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 59170/F/2013</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/செயற்பொறியாளர்,
(இயக்கமும், பராமரிப்பும்),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம்.

மேல்முறையீட்டு அலுவலர் மற்றும்
மேற்பார்வைப் பொறியாளர்,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
திருப்பூர்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. கே.ஆறுமுகன்,
3/6, கட்டபொம்மன் வீதி,
கள்ளபாளையம்,
செட்டிபாளையம் (வழி),
கோயம்புத்தூர்–641 201.

*jb*